**செய்தி வெளியீடு எண்:548** **நாள்:24.11.2016**

## <u>செய்தி வெளியீடு</u>

## <u>தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம்</u>

### <u>தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் அரசு இ–சேவை மையங்களில் மின்னணு வாழ்வு சான்றிதழ் (Digital Life Certificate) பெறலாம்.</u>

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் தமிழகம் முழுவதும் 486 அரசு இ–சேவை மையங்களை அமைத்து அரசின் பல்வேறு துறைகள் சார்ந்த சேவைகளை வழங்கி வருகிறது.

தற்பொழுது, கூடுதல் சேவையாக 24.11.2016 முதல் ஓய்வூதியதாரர்களுக்கு மின்னணு வாழ்வு சான்றிதழ் (Digital Life Certificate) வழங்கும் சேவை துவக்கப்படவுள்ளது. மின்னணு வாழ்வு சான்றிதழ் பெற விரும்பும் ஓய்வூதியதாரர்கள், இந்நிறுவனத்தின் இ–சேவை மையத்தில் தங்களது ஆதார் எண்ணை தெரிவித்து, கைவிரல் ரேகையைப் பதிவு செய்து, ஓய்வூதியம் தொடர்பான தகவல்களை தெரிவித்தால், அவர்களுக்கு மின்னணு வாழ்வு சான்றிதழ் அச்சிட்டு வழங்கப்படும். இதற்கு சேவைக் கட்டணமாக ரூ.10/– (ரூபாய் பத்து மட்டும்) வசூல் செய்யப்படும்.

மேலாண்மை இயக்குநர்

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**